15th March 1966]

திரு. ஆ. தங்கவேலு : தலைவர் அவர்களே, 1965-66-ல் சேர்க்கப் பட்ட ஆதாரப் பயிற்சி, ஜூனியர் பேசிக் மாணவர்களுக்கு ஸ்டைபண்ட் நிறுத்தப்பட்டிருக்கிறதா? நிறுத்தப்பட்டிருந்தால், காரணம் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. மு. பொ. வடிவேல் : கடந்த ஆண்டு எடுக்கப்பட்ட ஐந்து பேர்களுடைய தேர்வு நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறதே. அதன் பேரில் அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது பற்றித் தகவல் இல்லை.

*298 கேள்வி—**திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள மகளிர் ஆதாரப் பயிற்சிப் பள்ளிகளுக்கு 1965-66-ம் ஆண்டில் விண்ணப்பம் செய்து கொண்ட மாணவிகள் எத்தனை பேர்?

(இ) அவர்களில் எந்தெந்த பள்ளிகளுக்கு எத்தனை மாணவி கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்?

(உ) இதற்கென்ன, தேர்வுக்குழு ஏதேனும் அமைக்கப் பட்டதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) 1,387 பேர் முது நிலை ஆதார கிரேடு பயிற்சிக்கும், 948 பேர் தொடக்க அல்லது இளநிலை ஆதார கிரேடு பயிற்சிக்கும் விண்ணப்பம் செய்தனர்.

(இ) செகண்டரி கிரேடு அல்லது முதுநிலை ஆதார கிரேடுக்கு தஞ்சாவூர், அரசாங்க ஆதாரப் பயிற்சிப் பள்ளியில் 80 பேரும், வேதாரண்யம், அரசாங்க ஆதாரப் பயிற்சிப் பள்ளியில் 40 பேரும், மன்னார்குடி செய்ண்ட் ஜோசப் பயிற்சிப் பள்ளியில் 40 பேரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தொடக்க அல்லது இளநிலை ஆதார கிரேடுக்கு தஞ்சாவூர், அரசாங்க ஆதாரப் பயிற்சிப் பள்ளியில் 80 பேரும், தரங்கம்பாடி செய்ண்ட் தெரசா மகளிர் ஆதாரப் பயிற்சிப் பள்ளியில் 40 பேரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

(உ) ஆம். அரசாங்க ஆதாரப் பயிற்சிப் பள்ளிகளுக்கு, தேர்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டன. தனியார் பயிற்சிப் பள்ளி களைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு கல்வி விதிகளைச் சேர்ந்த 132-வது விதியின்படி நிர்வாகத்தினரே மாணவர்களைத் தேர்ந் தெடுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

திரு. ஆ. கு. சுப்பையா : சார், இந்தக் குழு யார் யார்களைக் கொண்டு அமைக்கப் பட்டிருக்கிறது? எந்தத் தகுதி அடிப்படை யில் அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள்?

[15th March 1966

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கக் கல்வித்துறை ஸ்தாபனங்களைச் சேர்ந்த அதிகாரிகள், தலைமை ஆசிரியர்கள், உத்தியோகப் பற்றற்றவர்கள், இவர்களையெல்லாம் சேர்த்துக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : சார், இந்த ஆசிரியர்களை தேர்ந் தெடுக்கும் பணியில், அதிகாரிகள் மட்டும் இருந்தாலே போது மானதே. கலெக்டர், அல்லது டெபுடி கலெக்டர் இவர்களிடம் இருந்தாலே போதுமானது. இதற்காகத் தனிப்பட்டவர்கள் போடப்படும்போது காங்கிரஸ்காரர்களை மட்டும் போடுவானேன், மற்றவர்களைப் போடாததற்குக் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்படி உத்தியோகப் பற்றற்ற வர்கள் இல்லாமல் அதிகாரிகளேதான் இருந்தனர். ஆனால், உத்தி யோகப் பற்றற்றவர்கள் இருக்கவேண்டும் என்கிற கோரிக்கை வலியுறுத்தப்பட்டு வந்தது. அதன் காரணமாக, அப்படிப்பட்ட வர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அதிலே இந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் சேர்க்கப்படவேண்டும், அந்தக் கட்சிக்காரரைச் சேர்க்கக் கூடாது என்று நிபந்தனை ஒன்றும் கிடையாது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : அமைச்சருடைய வாதத்திற்கு மாறாக, எங்களில் 50 பேர்கள் இருக்கும்போது, அவர்களில் ஒருவர் கூட சேர்க்கப்படவில்லையே. அதன் காரணம் என்ன என்று விளக்க முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : யார் சேர்க்கப்படவில்லை என்பதற்குக் காரணம் கூற முடியாது.

* 299 கேள்வி—**திரு. ஆ. துரையரசன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965-66-ம் ஆண்டில் மதுரை மாவட்டம் பெரியகுளம் தாலூகாவிலுள்ள ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கு விண்ணப்பம் செய்துகொண்டவர்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) பெரியகுளம் தாலூகாவில் பயிற்சிப் பள்ளி எதுவும் இல்லை. எனினும், செகண்டரி அல்லது சீனியர் பேசிக் கிரேடு பயிற்சிக்காக 1,664 விண்ணப்பங்களும், தொடக்க அல்லது ஜூனியர் பேசிக் கிரேடு பயிற்சிக்காக 534 விண்ணப்பங்களும் இத்தாலூகாவிலிருந்து வரப்பெற்றன.

(இ) செகண்டரி அல்லது சீனியர் பேசிக் கிரேடு பயிற்சிக்காக 124 நபர்களும், தொடக்க அல்லது ஜூனியர் பேசிக் கிரேடு பயிற்சிக்காக 35 நபர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

* 300 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the Girls Teachers' Training School in Palani was temporarily closed due to spread of a severe